

# பாசல் நகரப்பாடசாலைகள் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகின்றன?

**பாசல் நகரப்பாடசாலைகளில் கல்விமுறைகள் கடந்த வருடங்களில் படிப்படியாகச் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இங்கு புதிய கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

டொச்மொழி பேசவேமுடியாத அல்லது சிறிதளவே பேசக்கூடிய பிள்ளைகள் டொச்மொழியை விளையாட்டு மூலம் கற்கக்கூடியதான நிலையங்களுக்கு, வாரம் இரு அரைநாட்கள் சமூகளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். டொச்மொழி கற்பிக்க வேண்டுமென்ற இக்கட்டாயமானது **(Deutschförderung)** பாலர்பாடசாலை ஆரம்பமாக ஒரு வருடத்திற்கு முன்னராக அமுலாக்கப்படவேண்டும்.
பாலர்பாடசாலை **(kindergarten)** யுடன் கட்டாயக்கல்வி ஆரம்பிக்கிறது. 5 வயது ஆரம்பமான பிள்ளைகளைப் பாலர் பாடசாலையில் சேர்க்கும் திகதி எல்லை 2016ம் ஆண்டுவரை படிப்படியாக ஆடிமாதம் 31ம் திகதிவரை தள்ளப்படவுள்ளது. (விபரங்களை www.volksschulen.bs.ch>Schulsystem> Kindergarten ல் பார்வையிடலாம்). பாலர்பாடசாலை (kindergarten) பிள்ளையின் வதிவிடப்பகுதியில் இரண்டு வருடங்கள் நடைபெறும். ஆகக்கூடியது 20 பிள்ளைகள் ஒரு வகுப்பில் இருப்பார்கள். பாடசாலை ஆவணிமாதத்தில் ஆரம்பமாகும். பெற்றோர்கள் பாலர்பாடசாலைக்கான விண்ணப்பப்படிவத்தை மார்கழிமாதம்தபால்மூலம்பெற்றுக்கொள்வர்.
அதன் பின்னர் **(Primarschule)** ஆரம்பப்பாடசாலை தொடரும். ஆரம்பப்பாடசாலை 6 வருடங்கள் நடைபெறும். இது பிள்ளையின் வதிவிடப் பகுதியிலேயே அமைந்திருக்கும். 3ம் வகுப்பில் பிரெஞ்சு மொழியும் 5ம் வகுப்பில் ஆங்கிலமும் கற்பிக்கத் தொடங்குவார்கள். ஆக்கூடியது 25 பிள்ளைகள் ஒரு வகுப்பில் இருப்பார்கள்.

ஆரம்பப்பாசாலையைத் தொடர்ந்து **(Sekundarschule)** இரண்டாம்நிலைப் பாடசாலைக்குப் பிள்ளைகள் செல்வார்கள். இது 3 வருடங்கள் நடைபெறும். மாணவர்களின் திறமைக்கேற்ப தரம் பிரிக்கப் படுவார்கள். A-Zug (பொதுவானபிரிவு) E-zug (விரிவானபிரிவு) P-zug (உயர்பிரிவு). (Sekundarschule) இரண்டாம்நிலைப்பாடசாலை பாசல் நகரம் முழுவதிலும் பத்துப்பாடசாலைகளில் இயங்குகின்றன. மாணவர்களின் திறமைக்கேற்ப ஒரு பிரிவில் இருந்து மற்றைய பிரிவுக்கு மாற்றப்படலாம். A-zugல் ஆகக்குடியது 16 மாணவர்கள் இருப்பார்கள். E-zugல் 23 மாணவர்களும் P-zugல் 25 மாணவர்களும் இருப்பார்கள். Sekundarschule (இரண்டாம்நிலைப்பாடசாலை) முடிவில் சகலமாணவர்களுக்கும் (Volkschule) மக்கள் பாடசாலை மதிப்பறிக்கை (தரச்சான்றிதழ்) வழங்கப்படும்.

பாசல் நகரப்பாடசாலைகள் பற்றிய மேலதிக விளக்கங்கள் வருடாந்தம் நடைபெறும் **(Informationensveranstaltungen für Eltern)** பெற்றோருக்கான தகவல் வழங்கும் நிகழ்வுகளின்போது வழங்கப்படும். வசந்த காலத்தில் பாலர்பாடசாலைக்கு அல்லது புதிதாகப்பாடசாலைக்குப் போகும் பிள்ளைகளின் பெற்றோருக்கு தகவல் வழங்குவதற்காகவே இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பலமொழிகளிற் தகவல்கள் அங்கு வழங்கப்படும்.

பாசல் நகரப்பாடசாலைகளது மேலதிக விபரங்களை

- கல்வித்திணைக்கள இணையத்தளம் **www.ed.bs.ch**
- Volksschulen, Kohlenberg 27,
  Postfach, 4001 Basel
  061 267 54 60, volksschulen@bs.ch
- அல்லது ஒவ்வொரு பாடசாலைகளிலும் பெறலாம்.

info

பாலர்பாடசாலைக் காலத்திலிருந்து மதிப்பீட்டறிக்கை வழங்குவதோடு பெற்றோருடனான தனிப்பட்ட உரையாடலும் இடம்பெறும். ஆரம்பப்பாடசாலை முதலாம் வகுப்பிலிருந்து சான்றிதழ் வழங்கப்படுவதுடன் 5ம் வகுப்பிலிருந்து மதிப்பீட்டுப்புள்ளியும் வழங்கப்படும். **(Volkschule)** மக்கள்பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பிலும் (பாலர்பாடசாலை, ஆரம்பப்பாடசாலை, இரண்டாம்நிலைப்பாடசாலை) இரண்டு பெற்றோர்பிரதிநிதிகள் மற்றும் ஒவ்வொரு பாடசாலையிலும் இரண்டு பெற்றோர் அங்கத்துவமடங்கிய பாடசாலை ஆலோசனைக்குழுவும் உள்ளது.

பாலர்பாடசாலை, ஆரம்பப்பாடசாலை மற்றும் இரண்டாம்நிலைப்பாடசாலைகளில் வகுப்பு நேரம் தவிர்ந்த நேரங்களில் **Tagesstrukturen** (பகல்நேரச்செயற்பாடுகள்) உள்ளன. கட்டணம் செலுத்திப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை Tagesstrukturen (பகல்நேரச்செயற்பாடுகள்) Mittagstischen (மதியஉணவு) Tagesheim und Tagesfamilien (பகற்காப்பகம் அல்லது பகற்பராமரிப்புக்குடும்பம்) என்பவற்றில் பராமரிப்பு, கவனிப்பு, பயிற்றுவிப்புச் சலுகை-

→

Informationen in den Sprachen
**Deutsch, Français, Italiano, English, Español, Shqip, Srpski hrvatski, Tamil, Türkçe: www.ed.bs.ch → welcome**

களைப் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலை விடுமுறையின் போது Tagesferien (பகல்விடுமுறை) செயற்பாடுகளும் உள்ளன. சகல பாடசாலைகளிலும் Blockzeiten (ஒரேமாதிரியான நேரஅட்டவணை) உண்டு. பிள்ளைகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரையும் பாலர்பாடசாலையில் ஒரு மாலை நேரமும், ஆரம்பப்பாடசாலையிலிருந்து பல மாலைநேர வகுப்புகளும் நடைபெறும்.

இரண்டாம்நிலைப்பாடசாலையோடு 11 வருடக்கட்டாயக்கல்வி முற்றுப் பெறுகிறது. தங்கள் கல்வித்தகமைக்கு ஏற்ப இளைஞர்கள் பின்வரும் வழிகளைத் தெரிவு செய்யலாம்.

- அவர்கள் (Berufslehre) தொழிற்கல்வியைப் பயிலுவர். (Fachmaturität) தொழில்சார் முதிர்ச்சிப் பரீட்சையை தொழிற்கல்விக்காலத்தில் அல்லது தொழிற்கல்விக்குப் பின்னர் செய்யும் போது துறைசார் உயர்கல்வியைத் (Fachhochschule) தொடர வழியமைத்துக் கொடுக்கிறது.
- அவர்கள் தொடர்ந்து தொழில் ரீதியான முழுநேரப்பாடசாலைக்கு அல்லது (Fachmaturitätsschule) தொழில்முதிர்கல்விக்குச் செல்லலாம்.
- அவர்கள் (Gymnasium) ஜிம்னாசியத்திற்குச் செல்லலாம். ஜிம்னாசியம் முதிர்ச்சிப் பரீட்சையில் முடியும். அதன் பின்னர் இளைஞர்கள் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைக் கற்கலாம்.
- எவ்விதமான தொடர்கல்விச் சாத்தியங்களும் கிடைக்காதவிடத்து மேலதிகமான (Brückenangebot) இணைப்பு வகுப்புக்குச் செல்லலாம்.

**(Kinder und Jugendliche mit Behinderungen)** மாற்றுச்சக்திகொண்ட (வலதுகுறைந்த) பிள்ளைகள் இயலுமானவரை வழமையான வகுப்பில் கற்பிக்கப்படுவதோடு மேலதிகமாக விசேடகல்வியாளர்களின் தனிப்பட்டஉதவியையும் பெற்றுக் கொள்ளலாம். பிரத்தியேக சலுகைகளடங்கிய அரச மற்றும் தனியார் பாடசாலைகளும் உள்ளன.

# Die Schullaufbahnen auf einen Blick

